# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 11 / 2016**

திரு. முல்லைவனநாதன்,
த/பெ பொன்னுரங்கம்,
குதிரை பொன்னி மேடு,
கழுப்பெரும்பாக்கம் அஞ்சல்,
வானூர் வட்டம் – 605 104. ..... மேல் முறையீட்டாளர்
(திரு. முல்லைவனநாதன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம் – 605 602. ..... எதிர்மனுதாரர்
(திரு.ஆ. நாகராஜ்குமார், செயற்பொறியாளர்/கண்டமங்கலம்)

**ஆணை நாள் – 19.8. 2016**

1. மேல்முறையீட்டாளரின் 8.1.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.11/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் மின்இணைப்பு பெற்ற நாளிலிருந்து இன்றுவரை உபயோகப்படுத்தி வரும் அவருடைய விசாய மின்இணைப்பு எண். (பகிர்மானம்) 163–ஐ தொடர்ந்து பயன்படுத்திட உரிய உத்தரவினை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல், எதிர்மனுதாரருக்கு அவருடைய பதிலுரையை சமர்ப்பிக்கும்படி 16.2.2016 அறிவிப்பின்படி கோரப்பட்டது. எதிர்மனுதாரரின் பதிலுரை 21.3.2016 அன்று மின்குறைதீர்ப்பாளர் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

4. மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 26.4.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

5. மேல்முறையீட்டாளர் திரு. முல்லைவனநாதன் அவர்கள் கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார். எதிர்மனுதாரர் சார்பில் திரு. எம். நாகராஜ் குமார், செயற்பொறியாளர்/கண்டமங்கலம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6. மேல்முறையீட்டாளர் மின்இணைப்புகள் துண்டிப்பு – மறு மின்இணைப்பு விபரம் பதிவு புத்தகத்தின் சம்பந்தப்பட்ட பக்கத்தில் உள்ள பத்திகளில் உள்ள முரண்பாட்டை சுட்டிக்காட்டி உதவி கணக்கு அலுவலருக்கு அனுப்பிய 4.6.2016 நாளிட்ட கடிதத்தின் நகலை மின்குறைதீர்ப்பாளருக்கும் சமர்ப்பித்துள்ளார்.

7. மேலும், மின்இணைப்புகள் துண்டிப்பு – மறு மின்இணைப்பு விபரம் பதிவு புத்தகத்தின் சம்பந்தப்பட்ட பக்கத்திலுள்ள முரண்பாட்டையும் அவருடைய மேற்கண்ட மின்இணைப்பு எண்.163ஐன் வைப்புத்தொகை 2008 வரை பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதையும் செயற்பொறியாளர், கண்டமங்கலம் அவர்களுக்கு தன்னுடைய 20.6.2016 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்து அதன் நகலையும் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பித்திருந்தார்.

8. மேற்கண்ட முரண்பாடுகள் சம்பந்தமாக இருதரப்பினரின் வாதங்களையும் கேட்பதற்கு வசதியாக 16.8.2016 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்னிலையில் கேட்புரை நடத்தப்படும் என்று 21.7.2016 நாளிட்ட அறிவிப்பு மூலம் இருதரப்பினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

9. 16.8.2016 அன்றைய கேட்புரை நாளில் எதிர்மனுதாரரின் சார்பில் கலந்து கொண்ட திரு. எம். நாகராஜ் குமார், செயற்பொறியாளர்/கண்டமங்கலம் அவர்கள் மேல்முறைட்டாளர் அவர்கள் மதராஸ் உயர்நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக W.P.No.25169 of 2016 வழக்கு தொடர்ந்து உள்ளார் என்றும், அந்த

வழக்கில் இடைக்கால தடை உத்தரவு (Interim Stay Order) 20.7.2016 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து அந்த இடைக்கால தடை உத்தரவின் நகலையும் அளித்துள்ளார்.

10. மேல்முறையீட்டாளரும் அவர் W.P.No.25169 of 2016 and W.M.P.No. 21573 of 2016 ஆகிய வழக்குகளில் இடைக்கால தடையாணை 20.7.2016 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்தார்.

11. வழக்கு எண். W.P.No.25169 of 2016 and W.M.P.No.21573 of 2016 இன் 20.7.2016 நாளிட்ட ஆணையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

"*xxx xxx xxx*
*Order : These petitions coming on for orders upon perusing the petitions and the respective affidavits filed in support thereof and upon hearing the arguments of M/s V. Raghavachari, Advocate for the petitioner in both the petitions and of Mr. Varunkumar, Advocate taking notice on behalf of the respondents in both the petitions the court made the following order :-*

*Mr. Varunkumar, learned counsel takes notice on behalf of the respondents. He undertakes to file counter within two weeks.*

*There shall be an order of interim stay of the impugned order, thereby, the respondents are injuncted from disconnecting the electricity connection and the injunction is granted su-motu, even in the absence of a petition in this regard.*
*xxx xxx xxx* "

12. மேற்கண்ட ஆணையின்படி மேற்கண்ட வழக்கு மதராஸ் உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என்பதும், அந்த வழக்கில் இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும், அறியமுடிகிறது.

13. இந்த மேல்முறையீட்டு மனு எண்.11/2016 ல் சம்பந்தப்பட்ட பொருள் பற்றிய வழக்கு மதராஸ் உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதால் நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)ஐ ஆராய விரும்புகிறேன். மேற்கண்ட விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"*xxx xxx xxx*
(*4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*
*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமம்தாரர், குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி*

*ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*
*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*
*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது.”*

**14.** மேற்கண்ட விதி 17(4)(ஈ)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, மின்குறைதீர்ப்பாளரின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையிலிருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் உடைய நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகைய முறையீட்டினை மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக்கொண்டு தீர்வு வழங்க முடியாது என்று தெரிகிறது.

**15.** இந்த மேல்முறையீட்டில் உள்ள முறையீடு சம்பந்தமாக மேல்முறையீட்டாளர் மதராஸ் உயர்நீதிமன்றத்தில் W.P.No.25169 of 2016 வழக்கு தொடர்ந்து, வழக்கு நிலுவையிலுள்ளதாலும், வழக்கில் இடைக்கால தடை உத்தரவு (Interim Stay Order) வழங்கப்பட்டுள்ளதாலும் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)(ஈ)ன் படி தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**16.** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.11/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திரு. முல்லைவனநாதன்,
த/பெ பொன்னுரங்கம்,
குதிரை பொன்னி மேடு,
கழுப்பெரும்பாக்கம் அஞ்சல்,
வானூர் வட்டம் – 605 104.

2) மேற்பார்வை பொறியாளர்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம் – 605 602.

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

4) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.